## சுருக்கம்

வேளாண்மை - உழவர் நலன் – தோட்டக்கலை - வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025-26 - மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் - அறிவிப்பு எண்.25 - ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் என்னும் புதிய திட்டத்தினை ரூ.126.481 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அனுமதி – திட்ட செயலாக்கத்திற்காக ரூ.38.679 கோடி நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு - வழிகாட்டு நெறிமுறைகள் அங்கீகரித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை

அரசாணை (நிலை) எண்.169

நாள்: 16.06.2025.
திருவள்ளுவர் ஆண்டு 2056,
விசுவாவசு வருடம்,
ஆனித் திங்கள் 2-ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. 2025-26-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள். (அறிவிப்பு எண். 25)
2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கடித எண்.மா.தி.2/4542/2025, நாள்:04.04.2025 மற்றும் 17.04.2025.

*******

**ஆணை:**

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று சட்டமன்ற பேரவையில் வெளியிடப்பட்ட 2025 – 26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025-26**

| அறிவிப்பு எண் | அறிவிப்புகள் |
|---|---|
| 25 | **ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் 2025-26**<br>மக்கள் நலமும், நல்வாழ்வும் அவர்கள் உண்ணும் உணவைப்பொறுத்தே அமைகிறது. உடல் நலம் பேண, ஊட்டச்சத்து மிக்க உணவினை உரிய அளவில் உட்கொள்வது இன்றியமையாததாகும். ஊட்டச்சத்துகளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறுவகைகள், |

சிறுதானியங்கள் பெரும்பங்காற்றுகின்றன. ஊட்டச்சத்து வழங்கும் இந்த விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" என்னும் புதிய திட்டம் தமிழ்நாட்டில் 2025-26 ஆம் ஆண்டில் 125 கோடி ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்".

**i. காய்கறிகள் விதைத்தொகுப்பு:**

காய்கறிகள், பழங்களின் தினசரி தேவை சராசரியாக ஒரு நபருக்கு 400 கிராம் ஆகும். ஊட்டச்சத்து மிக்க நஞ்சற்ற காய்கறிகள் கிடைப்பதை உறுதி செய்திடவும், மக்களின் அன்றாட காய்கறித் தேவைகளை நிறைவு செய்யவும், வீட்டுத்தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாக தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரை வகைகள் போன்ற ஆறு வகையான காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்பு 15 இலட்சம் குடும்பங்களுக்கு 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

**ii. பழச்செடிகள் தொகுப்பு:**

நகர்ப்புரங்களிலும் கிராமப்புரங்களிலும் வசிக்கும் மக்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விரைவில் பலனளிக்கும் பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய மூன்று வகையான பழச்செடிகள் அடங்கிய பழச்செடித் தொகுப்புகள் ஒன்பது இலட்சம் குடும்பங்களுக்கு, 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

**iii. காய்கறி பரப்பு விரிவாக்கம்:**

தமிழ்நாட்டில், காய்கறிகளின் தேவைக்கேற்ப அவற்றின் பரப்பு, உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தக்காளி, வெங்காயம், முருங்கை, கத்தரி, பச்சை மிளகாய், வெண்டை, கீரை போன்ற முக்கிய காய்கறிப்பயிர்கள் 14 ஆயிரம் ஏக்கரில் பரப்பு விரிவாக்கம் செய்யப்படும். இந்தப் பரப்பு விரிவாக்கம் பெருமளவு சென்னைக்கு அருகிலுள்ள மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு சென்னைக்கான காய்கறித்தேவை நிறைவு செய்யப்படும்.

**iv. பழங்கள் பரப்பு விரிவாக்கம்:**

வைட்டமின்கள், நார்ச்சத்துகள், இரும்புச்சத்து, தாது உப்புக்கள் போன்ற சத்துகள் நிறைந்த பழங்களின் சாகுபடி பரப்பானது 12 ஆயிரம் ஏக்கரில் ஊக்குவிக்கப்படும்.

**v. பந்தல் காய்கறிகள் சாகுபடி:**

பந்தல் காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 1200 ஏக்கர் பரப்பில் பந்தல் அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

**vi. பயறு பெருக்குத் திட்டம்:**

பயறுவகை உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திட, 2025-26 ஆம் ஆண்டில், பயறு பெருக்குத் திட்டம் 5 இலட்சத்து 72 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 2 இலட்சத்து 50 ஆயிரம் உழவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.

**vii. துவரை சாகுபடி பரப்பு விரிவாக்கம்:**

தமிழ்நாட்டில் துவரையின் பரப்பு குறைந்து கொண்டே வரும் நிலையில், கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு சீரிய முயற்சிகளால், துவரை பரப்பு, ஒரு இலட்சத்து 59 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது. துவரை சாகுபடிப் பரப்பு குறைந்து வரும் மாவட்டங்களில், 80 ஆயிரம் ஏக்கர் பரப்பில், துவரையைத் தனிப்பயிராகவோ, வரப்புப் பயிராகவோ அல்லது ஊடுபயிராகவோ பயிரிடுவது ஊக்குவிக்கப்படும்.

**viii. பயறு வகைகள் விதைத்தொகுப்பு:**

புரதச்சத்து நிறைந்த மரத்துவரை, காராமணி உள்ளிட்ட பயறுவகைகளை இல்லம்தோறும் வளர்க்கும் பொருட்டு பயறுவகை விதைகள் அடங்கிய தொகுப்பு ஒரு இலட்சம் இல்லங்களுக்கு 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

**ix. காளான் உற்பத்திக் கூடம்:**

புரதச்சத்து மிகுந்த காளான் உற்பத்தியை பெருக்குவதுடன், புதிய தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும், ஊரகப் பகுதிகளில் ஐந்து காளான் உற்பத்திக் கூடங்கள் அமைத்திட மானியம் வழங்கப்படும்.

**x. நடமாடும் விற்பனை வண்டி:**

உழவர்கள் தாங்கள் விளைவித்த காய் கனிகளை நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்திட, 4,000 நடமாடும் விற்பனை வண்டிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் தனது கருத்துருவில் மேற்கண்ட அறிவிப்பு எண்.25 ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தின் 11 திட்டக்கூறுகளில், 3 திட்டக்கூறுகள் வேளாண்மை துறையின் மூலமாகவும், 8 திட்டக்கூறுகள் தோட்டக்கலைத்துறையின்

மூலமாகவும் செயல்படுத்தப்படும் எனத் தெரிவித்து திட்ட செயலாக்கம் மற்றும் நிதி தேவை குறித்த விவரங்களை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

**திட்ட செயலாக்கம்**

**(அ) வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகள் மற்றும் நிதி தேவை விவரங்கள்:**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டக்கூறு | பொருள் (எக்டர்/ எண்கள்) | தேவைப்படும் மொத்த நிதி | ஒன்றிய அரசின் நிதி | மாநில அரசின் நிதி | திட்டத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பயறு பெருக்குத் திட்டம் – 2.288 இலட்சம் எக்டர் | 2.178 இலட்சம் எக்டர் | 36.137 | 21.682 | 14.455 | தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் (NFSNM) |
| | | 11,000 எக்டர் | 2.375 | 1.425 | 0.950 | நெல் தரிசில் பயறு சாகுபடி திட்டம் (TRFA) |
| | **மொத்தம்** | | **38.512** | **23.107** | **15.405** | |
| 2 | துவரை, காராமணி போன்ற பயறுவகை விதைத்தொகுப்பு (ரூ.67/ தொகுப்பு) – 1 இலட்சம் | 1 இலட்சம் தொகுப்பு | 0.670 | 0.000 | 0.670 | மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (SADS) |
| 3 | துவரை சாகுபடி பரப்பு விரிவாக்கம் – 32,000 எக்டர் | 32,000 எக்டர் | 20.000 | 0.000 | 20.000 | மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (SADS) |
| | **மொத்தம்** | | **20.670** | **0.000** | **20.670** | |
| | **ஆக மொத்தம்** | | **59.182** | **23.107** | **36.075** | |

**(ஆ). தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகள் மற்றும் நிதி தேவை விவரங்கள்:**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டக்கூறு | பொருள் (எக்டர்/ எண்கள்) | தேவைப்படும் மொத்த நிதி | ஒன்றிய அரசின் நிதி | மாநில அரசின் நிதி | திட்டத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| I | **தோட்டக்கலைத்துறை** | | | | | |
| 1 | **காய்கறி பரப்பு விரிவாக்கம்** : தக்காளி, வெங்காயம், முருங்கை, கத்திரி, பச்சை மிளகாய், வெண்டை, கீரை போன்ற முக்கிய காய்கறிப்பயிர்களில் பரப்பு விரிவாக்கம் - 5,333 எக்டர் | 2500 எக்டர் | 5.600 | 3.360 | 2.240 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| | | 2,833 எக்டர் | 6.600 | 3.960 | 2.640 | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | பழங்கள் பரப்பு விரிவாக்கம்: மா, கொய்யா, பப்பாளி, எலுமிச்சை, மாதுளை, சாத்துக்குடி, சப்போட்டா, அன்னாசி, ஆரஞ்சு, வாழை (கரனை மற்றும் திசு வாழை), டிராகன் பழம், லிட்சி, மங்குஸ்தான், ரம்புட்டான், அத்தி, வறண்ட நிலங்களுக்கு உகந்த பழப்பயிர்கள் (விளாம்பழம், கொடுக்காப்புளி, சீத்தா, பெருநெல்லி) மற்றும் தர்பூசணி போன்ற முக்கிய பழப்பயிர்கள் - 4736 எக்டர் | 2857 எக்டர் | | 10.717 | 6.430 | 4.287 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| | | 1879 எக்டர் | | 4.934 | 2.961 | 1.974 | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY) |
| 3 | பந்தல் காய்கறி சாகுபடி - 494.6 எக்டர் (ரூ.3,00,000/ எக்டர்) | 494.6 எக்டர் | | 14.838 | 8.903 | 5.935 | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY) |
| 4 | காளான் உற்பத்தி கூடம் - 5 எண்கள் (ரூ.12,00,000/ எண்) | 5 எண்கள் | | 0.600 | 0.360 | 0.240 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 5 | நடமாடும் விற்பனை வண்டி - 4000 எண்கள் (ரூ.15,000/ எண்) | 4000 எண்கள் | | 6.000 | 3.600 | 2.400 | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| | மொத்தம் | | | 49.290 | 29.574 | 19.716 | |
| 6 | காய்கறிகள் விதைத்தொகுப்பு - (தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கீரை வகைகள், கொத்தவரை (ரூ.60/தொகுப்பு) – 15 இலட்சம் | 15 இலட்சம் தொகுப்பு | | 9.000 | 0.000 | 9.000 | மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | பழச்செடிகள் தொகுப்பு - (பப்பாளி, கொய்யா, எலுமிச்சை) (ரூ.100/தொகுப்பு) – 9 இலட்சம் | 9 இலட்சம் தொகுப்பு | 9.000 | 0.000 | 9.000 | மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS) |
| 8 | பழங்கள் பரப்பு விரிவாக்கம் - இலந்தை - 5 எக்டர் (ரூ.18,000/ எக்டர்) | 5 எக்டர் | 0.009 | 0.000 | 0.009 | மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS) |
| | **மொத்தம்** | | **18.009** | **0.000** | **18.009** | |
| | **ஆக மொத்தம்** | | **67.299** | **29.574** | **37.725** | |

3. மேற்கண்ட வேளாண்மை நிதிநிலை அறிக்கை அறிவிப்பான ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தினை ரூ.126.481 கோடியில் செயல்படுத்திட ஒன்றிய, மாநில அரசு பகிர்வு நிதியில் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகளுக்கு அனுமதியும், மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகளுக்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பும் வழங்குமாறு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அக்கருத்துருவினை ஏற்கலாம் எனக் கருதி, மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று நடைபெற்ற வேளாண்மை நிதிநிலை அறிக்கையின் போது சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளுள், மேலே பத்தி-1 இல் காணும் அறிவிப்பில் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" திட்டத்தில் உள்ள 11 திட்டக்கூறுகளில் 6 திட்டக்கூறுகள் ஒன்றிய, மாநில அரசு பகிர்வு நிதியுதவியுடன் (ரூ.87.802 கோடி) செயல்படுத்தப்படவுள்ளதால் அவற்றிற்கான நிதி பெறப்பட்டவுடன் ஒன்றிய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்திட (இணைப்பு-2(அ)-வில் உள்ளவாறு) அனுமதியும், மாநில அரசு நிதியில் 5 திட்டக்கூறுகளை ரூ.38,67,90,000/- (முப்பத்தெட்டு கோடியே அறுபத்தேழு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) நிதியில் வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் செயல்படுத்திட (இணைப்பு-2(ஆ)-வில் உள்ளவாறு) நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பும் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது. இத்திட்டத்திற்கான செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வாணையுடன் இணைப்பு-1 ஆக சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் இயக்குநர் வேளாண்மைத் துறை மற்றும் இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் இத்திட்டத்திற்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

5. மேலே பத்தி-4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினமான ரூ.38.679 கோடி பின்வரும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

**(அ) வேளாண்மைத் துறை இயக்குநருக்கு ஒப்பளிக்கப்படும் தொகை ரூ.20.670 கோடிக்கான கணக்குத் தலைப்பு:**

| வ. எண். | கணக்குத் தலைப்பு | நிதி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2401 – 00 - பயிர்வளர்ப்பு – 104 – வேளாண்மைப் பண்ணைகள் – மாநில செலவினங்கள் - AK மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – 311 - மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம். (DPC: 2401-00-104-AK-311-01) | 1653.600 |
| 2 | 2401 – 00 - பயிர்வளர்ப்பு 789 – ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – மாநில செலவினங்கள் - AH மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம் - 311 - மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம். (DPC: 2401-00-789-AH-311-01) | 392.73 |
| 3 | 2401 – 00 - பயிர் வளர்ப்பு – 796 – பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் – மாநில செலவினங்கள் - AD மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம் - 311 - மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம். (DPC: 2401-00-796-AD-31101) | 20.670 |
| | மொத்தம் | 2067.000 |

(ரூபாய் இருபது கோடியே அறுபத்து ஏழு இலட்சம் மட்டும்)

**(ஆ) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு ஒப்பளிக்கப்படும் தொகை ரூ.18.009 கோடிக்கான கணக்குத் தலைப்பு:**

| வ. எண். | கணக்குத் தலைப்பு | நிதி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2401 – 00 - பயிர்வளர்ப்பு – 119 தோட்டக்கலையும் காய்கறி பயிர்வளர்ப்பும் – மாநில செலவினங்கள் – BJ – மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் – 311 - மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம். (DPC:2401-00-119-BJ-311-01) | 1440.72 |
| 2 | 2401 – 00 - பயிர்வளர்ப்பு – 789 – ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – மாநில செலவினங்கள் – AM – மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் – 311 - மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம். (DPC:2401-00-789-AM-311-01) | 342.171 |

[த.பி.பா]

| | | |
|---|---|---|
| 3 | 2401 – 00 - பயிர் வளர்ப்பு – 796 - பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் – மாநில செலவினங்கள் – AG – மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் – 311 – மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம். (DPC:2401-00-796-AG-31101) | 18.009 |
| | **மொத்தம்** | **1800.900** |

(ரூபாய் பதினெட்டு கோடியே தொண்ணூறாயிரம் மட்டும்)

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.23,31,23,000/- 2025-2026-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2025-2026-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட வேளாண்மைத் துறை இயக்குநர் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2025-2026-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (வேளாண்மை-உ.ந./வ.செ.பொ-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு வேளாண்மைத் துறை இயக்குநர் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படவுள்ள மேற்சொன்ன ஐந்து திட்டக்கூறுகளைச் செயல்படுத்த கீழ்க்காணும் இனங்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

i. மாநில அரசு நிதியில் துவரை, காராமணி போன்ற பயறுவகை விதைத்தொகுப்பு மற்றும் துவரை சாகுபடிப் பரப்பு விரிவாக்கம் ஆகிய திட்டக்கூறுகளை ரூ.20.670 கோடி நிதியில் வேளாண்மைத் துறையின் மாநில வேளாண்மை வள்ர்ச்சித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தவும், இத்தொகையினை வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் பெற்று வழங்கிடவும் அனுமதி;

ii. மாநில அரசு நிதியில் காய்கறிகள் விதைத்தொகுப்பு, பழச்செடிகள் தொகுப்பு மற்றும் இலந்தை பரப்பு விரிவாக்கம் ஆகிய திட்டக்கூறுகளை ரூ.18.009 கோடி நிதியில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மாநில தோட்டக்கலை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தவும், இத்தொகையினை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் பெற்று வழங்கிடவும் அனுமதி;

iii. இத்திட்டத்தின் பயன்கள் விவசாயிகளுக்கு விரைந்து சென்றடைய நிதி செலவினம் மேற்கொள்வதற்கு ஏதுவாக IFHRMS-இல் காலாண்டு கட்டுப்பாட்டினை தளர்வு செய்ய அனுமதி.

iv. திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும் இனங்களின் நிதி இலக்கிற்கு மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ள வேளாண்மைத் துறை இயக்குநர் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு அனுமதி அளித்து அது தொடர்பான செயல் வழிகாட்டு நெறிமுறைகளை (Executive Guidelines) வேளாண்மைத் துறை இயக்குநர் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களே மாற்றி அமைத்துக் கொள்ள அனுமதி.

8. இவ்வாணை நிதித்துறையின் 16.06.2025-ஆம் நாளிட்ட அ.சா.எண்.10240472/நிதி (வே-உ.ந)/2025-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0398 (முந்நூற்று தொண்ணூற்றெட்டு) (IFHRMS ASL No.2025060398).

(ஆளுநரின் ஆணைப்படி)

வ.தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை-5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, சென்னை – 5.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மாநில விதைமேம்பாட்டு முகமை, சென்னை – 5.
முதன்மை கணக்காயர் (G&SSA/E&RSA). சென்னை-18.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
கருவூல கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை- 9.
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை- 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் தனிச் செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை - 9.

நிதி (வே-உ.ந/ வ.செ(பொது )-I&II/வ.வ-I) த் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-9.

வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.1/வே.உ.1/வே.உ.3//வே.உ.4/
அநமு.3/வ&தி) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.

சம்பந்தப்பட்ட கோப்பு எண்.10240472/தோ.க.2/2025.

இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[பொ.இரவி]
அரசு சார்புச் செயலாளர்

ம.பொ.தி
16/6/25.

[த.பி.பா]

**இணைப்பு-I**

**அரசாணை (நிலை) எண்.169, வேளாண்மை – உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள்:16.06.2025**

**ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் - 2025-26 வழிகாட்டு நெறிமுறைகள்**

1. **காய்கறிகள் விதைத்தொகுப்பு**

i. **பரிந்துரைக்கப்படும் மாவட்டங்கள்:**
- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள். (நீலகிரி மாவட்டம் நீங்கலாக)

ii. **திட்ட விளம்பரம்:**
- ஏப்ரல் – மே
- இத்திட்டத்தின் குறிக்கோள்கள், உதவிகள் மற்றும் பலன்கள் குறித்து பயனாளிகள் அறிந்திடும் வகையில் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- இத்திட்டம் தொடர்பான தொடர்பு அலுவலர் மற்றும் முகவரி அதில் குறிப்பிடப்பட வேண்டும்.

iii. **விவசாயிகள் தேர்வு:**
- **முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவர்கள்:**
  - உழவர் செயலியில் பதிவேற்றம் செய்தவர்கள்.
  - tnhorticulture.tn.gov.in எனும் வலைதளத்தில் விண்ணப்பித்தவர்கள்.
  - கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங்களுக்கு முன்னுரிமை அளித்து வழங்கப்பட வேண்டும்.
  - பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.
- **விவசாயிகள் பட்டியல் தேர்வு:**
  - மே-ஜூலை 2025 மாத இறுதிக்குள் பயனாளிகள் தேர்வு செய்திட வேண்டும்.

iv. **தேவைப்படும் ஆவணங்கள்:**
- ஆதார்/குடும்ப அட்டை நகல்

v. **பயனாளிகள் பட்டியல் சரிபார்த்தல்:**
- தோட்டக்கலை உதவி அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் மூலம் சரிபார்க்கப்பட்டு, தோட்டக்கலை உதவி இயக்குநரால் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

[த.பி.பா]

- இத்திட்டத்தின் கீழ் ஒரு பயனாளி, அதிகபட்சமாக 2 விதைத் தொகுப்புகள் வரை பெறலாம்.

vi. **திட்டம் செயல்படுத்துவதற்கான கால அளவு:**

- இத்திட்டம் ஜூன் 2025 முதல் ஜனவரி 2026 வரை செயல்படுத்தப்படும்.

vii. **திட்டக்கூறுகள் மற்றும் செயல்பாடுகள்:**

| காய்கறிகள் விதைத்தொகுப்பு | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **இடுபொருள் விதைகள்** | **ஒரு அலகின் விலை (ரூ.)** | **இடுபொருள் ஆதாரம்** |
| 1 | தக்காளி<br>கத்தரி<br>மிளகாய்<br>வெண்டை<br>கீரை வகைகள்<br>கொத்தவரை | 60.00 | அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் - டான்ஹோடா |
| **தொழில்நுட்ப விபரங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரம்** | | | |
| **100% மானியம் ஒரு காய்கறிகள் விதைத்தொகுப்புக்கு அதிகபட்சமாக ரூ.60/-** | | | |
| **15,00,000 காய்கறிகள் விதைத்தொகுப்புகளுக்கு ரூ. 900.00 இலட்சம்** | | | |

- தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் தொகுப்புகள் முறையாக வழங்கப்படுவதை வட்டார அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

viii. **ஆவணப்படுத்துதல்:**

- திட்டம் செயல்படுத்தியதற்கான ஆவணங்களை (புகைப்படம், காணொளி காட்சிகள் (video clippings), திட்டத்தின் பலன், பயனாளிகளின் கருத்துக்கள்) தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்கள் தயார் செய்திட வேண்டும்.
- திட்டத்தில் வழங்கப்படும் காய்கறி விதைத்தொகுப்புகளை பயண நாட்களில் பார்வையிட்டு அதற்குரிய புகைப்படம் மற்றும் வழங்கிய தொழில்நுட்ப அறிவுரைகளை UATT செயலியில் பதிவு செய்திட வேண்டும்.
- இத்திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் அனைவரும் புகைப்படத்துடன் Geotag செய்யப்பட வேண்டும்.

2. <u>பழச்செடிகள் தொகுப்பு</u>:

i. **பரிந்துரைக்கப்படும் மாவட்டங்கள்:**

- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள். (சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக)

ii. **திட்ட விளம்பரம்:**

- ஏப்ரல் – மே
- இத்திட்டத்தின் குறிக்கோள்கள், உதவிகள் மற்றும் பலன்கள் குறித்து பயனாளிகள் அறிந்திடும் வகையில் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- இத்திட்டம் தொடர்பான தொடர்பு அலுவலர் மற்றும் முகவரி அதில் குறிப்பிடப்பட வேண்டும்.

iii. **விவசாயிகள் தேர்வு:**

- **முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவர்கள்:**
  - ➢ உழவர் செயலியில் பதிவேற்றம் செய்தவர்கள்.
  - ➢ tnhorticulture.tn.gov.in வலைதளத்தில் ஆதார் எண் பதிவேற்றம் செய்தவர்கள்.
  - ➢ கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங்களுக்கு முன்னுரிமை அளித்து விநியோகிக்கப்பட வேண்டும்.
  - ➢ பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.
- **விவசாயிகள் பட்டியல் தேர்வு:**
  - ➢ மே-ஜூலை 2025 மாத இறுதிக்குள் பயனாளிகள் தேர்வு செய்திட வேண்டும்.

iv. **தேவைப்படும் ஆவணங்கள்:**

- ஆதார்/குடும்ப அட்டை நகல்

v. **பயனாளிகள் பட்டியல் சரிபார்த்தல்:**

- தோட்டக்கலை உதவி அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் தோட்டக்கலை அலுவலர்/துணை தோட்டக்கலை அலுவலர் மூலம் சரிபார்க்கப்பட்டு, தோட்டக்கலை உதவி இயக்குநரால் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் ஒரு பயனாளி அதிகபட்சமாக 2 தொகுப்புகள் வரை பெறலாம்.

vi. **திட்டம் செயல்படுத்துவதற்கான கால அளவு:**

- இத்திட்டம் ஜூன் 2025 முதல் ஜனவரி 2026 வரை செயல்படுத்தப்படும்.

vii. **திட்டக்கூறுகள் மற்றும் செயல்பாடுகள்:**

| பழச்செடிகள் தொகுப்பு | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **விவரங்கள்** | **ஒரு அலகின் விலை (ரூ.)** | **இடுபொருள் ஆதாரம்** |
| 1 | பப்பாளி | 100.00 | அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் - டான்ஹோடா |
| | கொய்யா | | |
| | எலுமிச்சை | | |
| **100% மானியம் அதிகபட்சமாக ரூ.100/பழச்செடி தொகுப்பு** | | | |
| **9,00,000 பழச்செடிகள் தொகுப்புகளுக்கு ரூ.900.00 இலட்சம்** | | | |

- போக்குவரத்து செலவு உட்பட
- தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் தொகுப்புகள் முறையாக வழங்கப்படுவதை வட்டார அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

viii. **ஆவணப்படுத்துதல்;**

- திட்டம் செயல்படுத்தியதற்கான ஆவணங்களை (புகைப்படம், காணொளி காட்சிகள் (video clippings), திட்டத்தின் பலன், பயனாளிகளின் கருத்துக்கள்) தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்கள் தயார் செய்திட வேண்டும்.
- திட்டத்தில் வழங்கப்படும் பழச்செடி தொகுப்புகளை பயண நாட்களில் பார்வையிட்டு அதற்குரிய புகைப்படம் மற்றும் வழங்கிய தொழில்நுட்ப அறிவுரைகளை UATT செயலியில் பதிவு செய்திட வேண்டும்.
- இத்திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் அனைவரும் புகைப்படத்துடன் Geotag செய்யப்பட வேண்டும்.

3. **<u>பழங்கள் பரப்பு விரிவாக்கம் – இலந்தை:</u>**

**திட்ட இன விவரம்;**

| **இனங்கள்** | **பொருள் (எக்டர்)** | **நிதி (ரூபாய் கோடியில்)** |
|---|---|---|
| பழங்கள் பரப்பு விரிவாக்கம் – இலந்தை, 40% மானியம் – ரூ.18,000/எக்டர் | 5 | 0.09 |
| **மொத்தம்** | 5 | 0.09 |

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்**: இலந்தை சாகுபடி செய்யும் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
- ஒரு எக்டருக்கு ரூபாய் 18,000/- வீதம் பின்னேற்பு மானியம் வழங்கப்படும்.
- மொத்த செலவு - ரூ.45,000/எக்டர், 40 சதவீத மானியம் - ரூ.18,000/எக்டர்.
- ஒரு விவசாயி அதிகபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.
- சிறு, குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யப்படும் இலந்தை பரப்பினை ஒத்திசைவு செய்து மாதாந்திர அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும், Digital Crop Survey-இல் பதிவு செய்யப்பட வேண்டும்

4. **<u>துவரை, காராமணி போன்ற பயறு வகை விதைத்தொகுப்புகள்:</u>**

i) **பரிந்துரைக்கப்படும் மாவட்டங்கள்:**

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக)

ii) **திட்ட விளம்பரம்**

- ஏப்ரல் - மே
- இத்திட்டத்தின் குறிக்கோள்கள், உதவிகள் மற்றும் பலன்கள் குறித்து பயனாளிகள் அறிந்திடும் வகையில் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- இத்திட்டம் தொடர்பான தொடர்பு அலுவலர் மற்றும் முகவரி அதில் குறிப்பிடப்பட வேண்டும்.

iii) **விவசாயிகள் தேர்வு:**

i. **முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவர்கள்:**

- இல்லங்களில் தோட்டத்தில் நடவு செய்ய ஏதுவாக இடம் உள்ளவர்கள்
- உழவர் செயலியில் பதிவேற்றம் செய்தவர்கள்
- AGRISNET வலைதளத்தில் ஆதார் எண் மற்றும் நில விவரங்கள் பதிவேற்றம் செய்தவர்கள்.
- பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

ii. **விவசாயிகள் பட்டியல் தேர்வு:**

- ஏப்ரல்-மே 2025 – சராசரியாக 1,00,000 பயனாளிகள் தேர்வு செய்திட வேண்டும்

[த.பி.பா]

iv) **தேவைப்படும் ஆவணங்கள்:**

- ஆதார்/குடும்ப அட்டை நகல்

v) **பயனாளிகள் பட்டியல் சரிபார்த்தல்:**

- காரீப்: மே-ஜூன் 2025
- வேளாண்மை உதவி அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் வேளாண் அலுவலர்/துணை வேளாண்மை அலுவலர் மூலம் சரிபார்க்கப்பட்டு, வேளாண் உதவி இயக்குநரால் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் ஒரு பயனாளி 1 தொகுப்பு பெறலாம்.

vi) **இடுபொருள் கொள்முதல்:**

| இடுபொருள் | ஆதாரம் | கொள்முதல் காலம் |
|---|---|---|
| மரத்துவரை, காராமணி உள்ளிட்ட பயறுவகை விதைகள் | டான்சிடா, வேளாண்மைத் துறை | ஏப்ரல் – மே 2025 |

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் திட்டத்திற்குத் தேவையான விதைகளை டான்சிடா மூலம் கொள்முதல் காலத்தில் குறிப்பிட்டுள்ள மாதத்திற்கு முன்னரே திட்ட இலக்குப்படி இருப்பில் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

vii) **திட்டம் செயல்படுத்துவதற்கான கால அளவு:**

- இத்திட்டம் ஜூன் 2025 முதல் ஜனவரி 2026 வரை செயல்படுத்தப்படும்.

viii) **திட்டக்கூறுகள்**

| பயறு வகைகள் விதைத்தொகுப்பு | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | இடுபொருள் விதைகள் | தேவைப்படும் அளவு (கிராமில்) | ஒரு அலகின் விலை (ரூ.) | இடுபொருள் ஆதாரம் |
| 1 | மரத்துவரை | 5 | 67.00 | டான்சிடா, வேளாண்மைத் துறை |
| | காராமணி | 10 | | |
| | அவரை | 10 | | |
| 100% மானியம் அதிகபட்சமாக ரூ.67/ தொகுப்பு | | | | |
| 1,00,000 தொகுப்புகளுக்கு | | ரூ. 67.00 இலட்சம் | | |

டான்சிடா மூலம் விதை கொள்முதல் செய்யப்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இலக்கின்படி ஒவ்வொரு பயறுவிதையையும் சிறு தொகுப்புகளாக சிப்பமிடப்பட்டு ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்பட வேண்டும்.

- **விதைக் கொள்முதல், சிப்பமிடல் – டான்சிடா, வேளாண்மைத்துறை**
- **விதைத் தொகுப்பு விநியோகம் – மாவட்டங்கள், வேளாண்மைத்துறை**

விதை கொள்முதல் செலவினம், சிப்பமிடும் செலவினம் டான்சிடாவால் முதலில் மேற்கொள்ளப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள், களப்பணியாளர்கள் மூலம் விதைத் தொகுப்புகளை விநியோகம் செய்ய வேண்டும்.

**ix) ஆவணப்படுத்துதல்:**

- திட்டம் செயல்படுத்தியதற்கான ஆவணங்களை (புகைப்படம், காணொளி காட்சிகள் (video clippings), திட்டத்தின் பலன், பயனாளிகளின் கருத்துக்கள்) துணை வேளாண்மை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர் தயார் செய்திட வேண்டும்.
- திட்டத்தில் அளிக்கப்பட்ட தொகுப்புகளை அலுவலர்கள் தங்களது பயண நாட்களில் பார்வையிட்டு அதற்குரிய புகைப்படம், வழங்கிய தொழில்நுட்ப அறிவுரைகளை UATT செயலியில் பதிவு செய்திட வேண்டும்.
- இத்திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் அனைவரும் புகைப்படத்துடன் Geotag செய்யப்பட வேண்டும்.

**5. <u>துவரை சாகுபடி பரப்பு விரிவாக்கம்</u>:**

**i) செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்**

சேலம், நாமக்கல், திருச்சி, கரூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர் ஆகிய 18 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**ii) திட்டக்கூறுகள்**

| இடுபொருள் | ஒரு ஏக்கருக்கு | ஒரு அலகின் விலை (ரூ.) | மொத்த விலை (ரூ.) | இடுபொருள் ஆதாரம் |
|---|---|---|---|---|
| விதை (வரப்புப்பயிர்) | 1.2 கிலோ | 123/ கிலோ | 148 | வேளாண்மைத் துறை |
| விதை (தனிப்பயிர்) | 4 கிலோ | 123/ கிலோ | 492 | |
| விதை (ஊடுபயிர்) | 1.6 கிலோ | 123/ கிலோ | 197 | |
| உழவு மானியம் | 2 முறை | 1,000/ முறை | 2,000 | பின்னேற்பு மானியம் |

[த.பி.பா]

| | | | | |
|---|---|---|---|---|
| திரவ இயற்கை உரம் | 2 லி | 500/லி | 1,000 | தனியார் |
| உயிர் உரங்கள் (ரைசோபியம் + பாஸ்போபாக்டீரியா+ திரவ பொட்டாஷ்) | தலா 500 மி.லி | 150/ 500 மி.லி | 450 | வேளாண்மைத் துறை |
| சூடோமோனாஸ் | 1 கிலோ | 180/ கிலோ | 180 | |
| இலைவழி உர தெளிப்பு மானியம் | 2 தெளிப்பு | 500/ தெளிப்பு | 1000 | பின்னேற்பு மானியம் |
| மொத்தம் (வரப்புப்பயிர் - விதை மட்டும்) | | | 148 | |
| மொத்தம் (தனிப்பயிர்) | | | 5,122 | |
| மொத்தம் (ஊடுபயிர்) | | | 4,827 | |
| அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ.2,500/- மானியம் | | | | |

iii) **திட்டம் செயல்படுத்துவதற்கான கால அளவு**

இத்திட்டம் ஜூன் 2025 முதல் டிசம்பர் 2025 வரை செயல்படுத்தப்படும்.

iv) **திட்டத்திற்கான பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள்**

- வேளாண்மை இணை இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்கள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் விதை, திரவ இயற்கை உரங்கள், உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் இருப்பில் உள்ளதை உறுதி செய்து, உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யப்படும் துவரை பரப்பினை ஒத்திசைவு செய்து மாதாந்திர அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும், Digital Crop Survey-இல் பதிவு செய்யப்பட வேண்டும்.
- தனிப்பயிர், ஊடுபயிர், வரப்புப் பயிர் ஆகியவற்றில் பெறப்பட்ட நிதி இலக்கினை அந்தந்த இனங்களில் மட்டும் செலவு செய்ய வேண்டும்.
- வரப்புப் பயிர் சாகுபடிக்கு BSR 1 துவரை இரகம் பயன்படுத்தப்பட வேண்டும்.
- இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் உழவர் செயலி மூலம் முழுமையான விவரங்களுடன் பதிவு செய்ய வேண்டும்.
- பதிவு செய்த விவசாயிகள் முன்னுரிமை அடிப்படையிலும், திட்ட இலக்கின் அடிப்படையிலும் தேர்வு செய்யப்பட வேண்டும்.
- வேளாண்மை உதவி அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் மூலம் சரிபார்த்து உரிய ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

- விவசாயிகள் சொந்த செலவில் மேற்கொண்ட இனங்களுக்கு பின்னேற்பு மானியமாக தொகையினை வழங்கலாம்.
- திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்பட்டதை உறுதி செய்ய வட்டார அளவில் வேளாண்மை உதவி இயக்குநர், மாவட்ட அளவில் வேளாண்மை துணை இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர்கள் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.
- மாநில அளவில் வேளாண்மை இயக்குநர் அலுவலகத்திலிருந்து வரும் மண்டல அலுவலர்களாலும் மற்றும் திடீர் ஆய்வு அலுவலர்களாலும் கள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்
- திட்டம் செயல்படுத்தியதற்கான ஆவணங்களை (புகைப்படம், காணொளி காட்சிகள் (Video Clippings) திட்டத்தின் பயன் மற்றும் வெற்றிக் கதைகள்) உதவி / துணை வேளாண்மை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள் ஆவணப்படுத்திட வேண்டும்.

வ.தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

16/6/25

பிரிவு அலுவலர்

ப.பொ.சி
16/6/25

**இணைப்பு-II-அ**

**அரசாணை (நிலை) எண்.169, வேளாண்மை – உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள்:16.06.2025**

**ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தினை ஒன்றிய, மாநில அரசு பகிர்வு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகள்:**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டக்கூறு | பொருள் (எக்டர்/ எண்கள்) | தேவைப்படும் மொத்தநிதி | ஒன்றிய அரசின் நிதி | மாநில அரசின் நிதி | திட்டத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| I | தோட்டக்கலைத்துறை | | | | | |
| 1 | காய்கறி பரப்பு விரிவாக்கம் : தக்காளி, வெங்காயம், முருங்கை, கத்தரி, பச்சை மிளகாய், வெண்டை, கீரை போன்ற முக்கிய காய்கறிப்பயிர்களில் பரப்பு விரிவாக்கம் - 5333 எக்டர் | 2500 எக்டர் | 5.600 | 3.360 | 2.240 | தேசிய தோட்டக்கலை இயக்கம்(NHM) |
| | | 2,833 எக்டர் | 6.600 | 3.960 | 2.640 | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY) |
| 2 | பழங்கள் பரப்பு விரிவாக்கம்: மா, கொய்யா, பப்பாளி, எலுமிச்சை, மாதுளை, சாத்துக்குடி, சப்போட்டா, அன்னாசி, ஆரஞ்சு, வாழை (கரணை மற்றும் திசு வாழை), டிராகன் பழம், லிட்சி, மங்குஸ்தான், ரம்புட்டான், அத்தி, வறண்ட நிலங்களுக்கு உகந்த பழப்பயிர்கள் (விளாம்பழம், கொடுக்காப்புளி, சீத்தா, பெருநெல்லி) மற்றும் தர்பூசணி போன்ற முக்கிய பழப்பயிர்கள் - 4736 எக்டர் | 2857 எக்டர் | 10.717 | 6.430 | 4.287 | தேசிய தோட்டக்கலை இயக்கம்(NHM) |
| | | 1879 எக்டர் | 4.934 | 2.960 | 1.974 | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | பந்தல் காய்கறி சாகுபடி - 494.6 எக்டர் (ரூ.3,00,000/ எக்டர்) | 494.6 எக்டர் | 14.838 | 8.903 | 5.935 | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PM-RKVY) |
| 4 | காளான் உற்பத்தி கூடம் - 5 எண்கள் (ரூ.12,00,000/ எண்) | 5 எண்கள் | 0.600 | 0.360 | 0.240 | தேசிய தோட்டக்கலை இயக்கம்(NHM) |
| 5 | நடமாடும் விற்பனை வண்டி - 4000 எண்கள் (ரூ.15,000/ எண்) | 4000 எண்கள் | 6.000 | 3.600 | 2.400 | தேசிய தோட்டக்கலை இயக்கம்(NHM) |
| | மொத்தம் | | 49.290 | 29.574 | 19.716 | |
| II | வேளாண்மைத் துறை | | | | | |
| 6 | பயறு பெருக்குத்திட்டம் – 2.288 இலட்சம் எக்டர் | 2.178 இலட்சம் எக்டர் | 36.137 | 21.682 | 14.455 | தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் (NFSNM) |
| | | 11,000 எக்டர் | 2.375 | 1.425 | 0.950 | நெல் தரிசில் பயறு சாகுபடி திட்டம் (TRFA) |
| | மொத்தம் | | 38.512 | 23.107 | 15.405 | |
| | ஆக மொத்தம் | | 87.802 | 52.681 | 35.121 | |

வ.தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

[த.பி.பா]

**இணைப்பு -II – ஆ**

**அரசாணை (நிலை) எண்.169, வேளாண்மை – உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள்:16.06.2025**

**ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தினை, மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டக்கூறுகள்:**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | திட்டக்கூறு | பொருள் (எக்டர்/ எண்கள்) | தேவைப்படும் மொத்த நிதி | ஒன்றிய அரசின் நிதி | மாநில அரசின் நிதி | திட்டத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| I | தோட்டக்கலைத்துறை | | | | | |
| 1 | காய்கறிகள் விதைத் தொகுப்பு - (தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கீரை வகைகள், கொத்தவரை (ரூ.60/தொகுப்பு) – 15 இலட்சம் | 15 இலட்சம் தொகுப்பு | 9.000 | 0.000 | 9.000 | மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS) |
| 2 | பழச்செடிகள் தொகுப்பு - (பப்பாளி, கொய்யா, எலுமிச்சை) ரூ.100/தொகுப்பு) – 9 இலட்சம் | 9 இலட்சம் தொகுப்பு | 9.000 | 0.000 | 9.000 | மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS) |
| 3 | பழங்கள் பரப்பு விரிவாக்கம் - இலந்தை - 5 எக்டர் (ரூ.18,000/எக்டர்) | 5 எக்டர் | 0.009 | 0.000 | 0.009 | மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS) |
| | **மொத்தம்** | | **18.009** | **0.000** | **18.009** | |
| II | வேளாண்மைத் துறை | | | | | |
| 4 | துவரை, காராமணி போன்ற பயறுவகை விதைத் தொகுப்பு (ரூ.67/தொகுப்பு – 1 இலட்சம் | 1 இலட்சம் தொகுப்பு | 0.670 | 0.000 | 0.670 | மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (SADS) |
| 5 | துவரை சாகுபடி பரப்பு விரிவாக்கம் – 32,000 எக்டர் | 32,000 எக்டர் | 20.000 | 0.000 | 20.000 | மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (SADS) |
| | **மொத்தம்** | | **20.670** | **0.000** | **20.670** | |
| | **ஆக மொத்தம்** | | **38.679** | **0.000** | **38.679** | |

வ.தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

16/6/25
பிரிவு அலுவலர்